www.agaram.lk



தரம் 10

# முதலாம் தவணைப் பரீட்சை - 2019

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I, II

பெயர் : நேரம் : 3 மணித்தியாலம்

### பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.
- தடித்த எழுத்திலுள்ள சொல் பற்றிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(01) வண்டுகள் காலைத்திலிருந்து வந்து காவி மதுவுண்ணும். இங்கு மது என்பதன் ஒத்த சொல்.
1. பொய்கை 2. வண்டு 3. தேன் 4. தாமரை

(02) சிறந்த கொழுங் கணையொன்று எடுத்தார். இங்கு கணை என்பதன் பொருள்.
1. வில் 2. நெருப்பு 3. நீர் 4. புனல்

(03) வெகுளி பொங்கிப் பகைவரை நிந்தித்தார். இங்கு வெகுளி என்பது.
1. கோபம் 2. பாசம் 3. அன்பு 4. கருணை

(04) நாவலரின் காலம் அவர்களுக்கு அனுகூலமாயிற்று. இங்கு அனுகூலம் என்பதன் எதிர்ப்பதம்.
1. பிரதிகூலம் 2. வாய்ப்பு 3. சந்தர்ப்பம் 4. சாதகம்

(05) "மானிடராய்ப் பிறப்பது அரிது" என்றார் ஔவையார். அரிது என்பதன் எதிர்ச்சொல்.
1. எளிது 2. சிறிது 3. பெரிது 4. இனிது

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(06) வயலும் வயல் சார்ந்த நிலமும்.
1. முல்லை 2. குறிஞ்சி 3. மருதம் 4. நெய்தல்

(07) எழுபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா.
1. பொன் விழா 2. வைர விழா 3. பவள விழா 4. அமுத விழா

(08) மனை, அகம், விடுதலை போன்ற பொருள்களைத் தரக்கூடிய ஒரு சொல்.
1. வீடு 2. உள்ளம் 3. சுதந்திரம் 4. நிம்மதி

(09) குண்டு - வடவை என்பது போல போத்து.
1. பிணை 2. பிணா 3. கலை 4. பெட்டை

(10) சுப்பர் மார்க்கட் (Super Market) என்பதன் தமிழ் வடிவம்.
1. நாளங்காடி 2. அங்காடி 3. அல்லங்காடி 4. சிறப்பங்காடி

(11) பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது.
1. பச்சைப்பசேல் 2. தோட்டந்துரவு 3. சூதுவாது 4. இன்னார் இனியவர்

(12) உற்சாகமூட்டல் எனும் பொருள் தரும் மரபுத்தொடர்.
1. தட்டிப்பறித்தல் 2. தட்டிக்கொடுத்தல் 3. தட்டிப் பேசுதல் 4. தட்டிப்பார்த்தல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

(13) கணினி இயங்கின என்பதில் உள்ள வழு,
1. எண் 2. காலம் 3. வினா 4. பால்

(14) "பத்திரமா போ மனே" இங்கு மனே எப்பிரதேச வழக்குச் சொல்,
1. வடக்கு 2. தெற்கு 3. கிழக்கு 4. மேற்கு

(15) பனை - வடலி என்பது போல வாழை,
1. பிஞ்சு 2. கச்சல் 3. காய் 4. தார்

(16) பகலில் அக்கம் பக்கம் பார்த்து பேசு, இங்கு அக்கம் பக்கம் என்பது,
1. அடுக்குத் தொடர் 2. இரட்டைக் கிளவி 3. அடுக்கிடுக்குத் தொடர் 4. இணைமொழி

(17) பின்வருவனவற்றுள் பொருள் வேறுபட்டு நிற்கும் சொல்லாக அமைவது,
1. மாதங்கம் 2. வேழம் 3. கடிதம் 4. யானை

(18) பயனற்ற சொல்லை உணர்த்தும் உவமைத் தொடர்,
1. அணை கடந்த வெள்ளம் போல 2. ஆனை வாயிற் கரும்பு போல
3. ஆற்றிலே கரைத்த புளி போல 4. ஆனை உண்ட விளாம்பழம் போல

(19) கனவில் கண்ட பணம் செலவுக்கு உதவுமா? என்ற பழமொழிக்கு ஈடான இன்னொரு பழமொழி,
1. இரக்கப் போனாலும் சிறக்கப்போ 2. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
3. இட்டுக் கெட்டார் எவரும் இல்லை 4. கனிந்த பழம் தானே விழும்

(20) சாது போல நடித்துத்தீது புரிதல் எனும் பொருளைத் தரும் மரபுத்தொடர்,
1. கை பிசைதல் 2. ஆற்றுப்படுத்தல்
3. உருத்திராட்சப்பூனை 4. தலை மேற்கொள்ளல்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

(21) "க" என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்
1. மேகம் 2. பங்கம் 3. காகம் 4. பாகம்

(22) "கண்டான்" என்பதன் பகுதியாக அமைவது
1. கண்ட 2. கண்டு 3. காண் 4. கண்

(23) கரு முகில் என்பது
1. வினைத்தொகை 2. வேற்றுமைத்தொகை 3. பண்புத்தொகை 4. உம்மைத்தொகை

(24) பெயராகவும் வினையாகவும் அமையக்கூடிய சொல்
1. நடு 2. பாய் 3. தடை 4. இடை

(25) "கோதுமை மாவால் செய்த தோசை". இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
1. முதலாம் வேற்றுமை 2. இரண்டாம் வேற்றுமை
3. மூன்றாம் வேற்றுமை 4. நான்காம் வேற்றுமை

(26) பின்வருவனவற்றுள் பல பொருள் உணர்த்தும் உரிச்சொல்
1. சால 2. நனி 3. கடி 4. உறு

(27) பின்வருவனவற்றுள் எதிர்கால இடைநிலையாக அமைவது
1. கின்று 2. ப், வ் 3. கிறு 4. இன், இல்

(28) பின்வருவனவற்றுள் பெயரெச்சத்தொடராக அமைவது
1. ரமணா பாடினாள் 2. பாடிய ரமணா 3. ரமணா வா 4. பாடினாள் ரமணா



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

(29) எங்கயோ போகப் போகிறோம். இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. எங்கயோ 2. போக 3. போகிறோம் 4. நாம்

(30) வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்றையும் கொண்ட சொல் எது?
1. தாழ்வு 2. பழம் 3. தமிழ் 4. பண்பு

- பின்வரும் பந்திகளின் பிரதான கருத்துக்களைத் தெரிவு செய்க.

(31) நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன் கொடுக்கும். தொன்மையான இவ்வுலகில் நல்லார் ஒருவர் இருப்பாராயின் அவர் நிமித்தம் எல்லோருக்குமாக மழை பெய்யும்.
1. நல்லவர் ஒருவர் இருப்பதால் எல்லோருக்கும் நன்மை விளையும்.
2. நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்கும் செல்லும்.
3. மழை எல்லோருக்கும் கிடைக்கின்றது.
4. நல்லார் இருக்கும் போது நாட்டில் மழை பெய்யும்.

(32) நெசவுத்தொழில் சிறந்த ஒரு தொழிலாகக் கருதப்படுகின்றது. "எவ்வுயிர்க்கும் தீங்கு பயிலாத தொழில் இதுவே. செய்யும் தொழில் எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின் பின் நெய்யும் தொழிலுக்கு நிகராகா" எனத் திருக்குறளும் கூறுகின்றது.
1. நெசவுத் தொழில் தீங்கு இல்லாதது
2. நெசவுத் தொழில் பற்றி வள்ளுவர் கூறியுள்ளார்
3. நெசவுத் தொழிலின் இழிவு பற்றி வள்ளுவர் கூறியுள்ளார்
4. நெசவுத் தொழிலின் சிறப்பு

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

(33) குறவனும் குரங்கும்
1. சென்றனர் 2. சென்றன 3. செல்கின்றன 4. செல்லும்

(34) இடப்பெயர்வினால் வரும் அகதிகள்
1. அதிகரித்துள்ளது 2. அதிகரித்துள்ளனர் 3. அதிகரிப்பிர்கள் 4. அதிகரித்தார்கள்

(35) என்னுடைய மாணவர்கள்
1. இதுகளல்ல 2. இவைகளல்ல 3. இவர்களல்லர் 4. இவர்கலல்ளர்

(36) இப்பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இன்றும்
1. மோசமாகிவிட்டிருக்கும் 2. மோசமாகிவிடும்
3. மோசமானதாக உள்ளது 4. மோசமானதாக உள்ளன.

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(37) நெற்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கம் விவசாயிகளுக்கு ………………………… வழங்க தீர்மானித்தது.
1. நிவாரணம் 2. மானியம் 3. நன்கொடை 4. குத்தகை

(38) அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான தகவல்களை உள்ளடக்கி ………………………… வெளியானது.
1. வர்த்தகதானி 2. வர்த்தமானி 3. பத்திரிகை 4. சுற்றுநிருபம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

(39) 2019ஆம் ஆண்டிற்கான ............................................ நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டது
1. பாதீடு 2. பிரேணை 3 .உடன்படிக்கை 4. வெள்ளையறிக்கை

(40) கீழே சில வாக்கியங்கள ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி எழுதினால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான அமைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. இது எல்லோருக்கும் உதவக்கூடியதல்ல.
ஆ. உவின்ஸோ அகராதி மிகப்பெரிய நூல்.
இ. G.U பொப் சிற்றகராதி ஒன்றை இயற்றி வெளியிட்டார்.
ஈ. அடக்கமான சிறு அகராதிகள் இயற்றுவதில் ஒரு சிலருக்கு நோக்கம் இருந்தது.

1. ஆ, இ, ஈ, அ 2. ஆ, அ, ஈ, இ 3. இ, ஆ, அ, ஈ 4. அ, ஆ, இ, ஈ

(40 புள்ளிகள்)

## பகுதி II

**(01) சுருக்கமான விடை தருக.**

01. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
ஏடறியேன் எழுத்தறியேன்
02. இசை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.
03. பெயர்ச் சொல்லின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
04. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.
நிறைவுடைய கதாபாத்திரங்களும் குறைவுடைய கதாபாத்திரங்களும் நம்மை இலட்சியத்துக்கு இட்டுச் செல்கின்றன.
05. "அதிபர் பாடசாலைக்கு சமூகமளித்தார்" என்ற உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாகத் மாற்றி எழுதுக.
06. அழைப்பிதழின் வகைகள் எவை?
07. பின்வரும் வாக்கியத்துக்குச் சரியான நிறுத்தற் குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.
அறிந்தோம் அருகன்வழி தங்கள் அறமாகட்டும் வருகிறோம்
08. எமிரோவோரி, எந்துண்டிவஸ்தி என்பது எவ்வகைச் சொல்லாகும்?
09. காலம் சென்ற அதிபரின் காவல் துறை தம்பியின் திருட்டுத்தனம் அம்பலமானது.
இவ் வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை நீக்கி எழுதுக.
10. மலர் விழியில் தாவிச் செல்கின்றாள், இங்கு வந்துள்ள அணியை எடுத்துக் காட்டுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

**(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பை இடுக.**

அ) இயற்கை அன்னை எமக்கு அளித்த பரிசு பூமி. அது நம்மைத் தாங்குகின்றது, வாழ வழி செய்கின்றது. எனவே நாம் அதனைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. பூமியின் இயற்கைத் தன்மையைப் பேணி அதிலிருந்து நன்மைகளை அனுபவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விளக்கக் கட்டுரை.

ஆ) தொடர்பாடலுக்கு மொழி மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு மாணவனும் தமது தாய் மொழியின் மீது பற்றும் தேர்ச்சியும் உள்ளவனாக இருக்க வேண்டும். அதே நேரம் ஏனைய மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருத்தல் தற்கால உலகுக்கு அவசியமான ஒன்றாகும். வேலை வாய்ப்புக்கும் தொடர்பாடலுக்கும் மொழிகள் அவசியமானவை என்பதைக் கருத்திற் கொண்டு ஒரு மேடைப் பேச்சு

இ) மேலை நாட்டு நாகரீக மோகத்தில் எமது நாட்டு இளைஞர்கள், யுவதிகள் மூழ்கியுள்ளனர். இதனால் நாட்டில் கலாசார சீரழிவு ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே மேல் நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மை, தீமை பற்றி இடம்பெறும் ஒரு உரையாடல்

ஈ) குமரன் வீதியிலே சென்று கொண்டிருக்கும் போது ஒரு துணிப்பையில் ஏதோ இருப்பது கண்டு அதை எடுத்துப் பார்த்து அதில் ஒரு தொகை பணம் இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைகிறான். பின்னர் நிகழ்ந்தவற்றை சித்தரிக்கும் விதமாக ஒரு சிறுகதை எழுதுக.

(25 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

**(03) கீழே தரப்பட்டுள்ள உரைப்ப பகுதியை வாசித்து தென் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையுமாறு சுருக்கி எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

"அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே" என்று ஆங்கிலக் கவிஞர் ஒருவர் அருளிப் போந்தார். கண்ணைக் கவரும் அழகினையும், கருத்தினைக் கவரும் அறிவினையும் தெய்வ நலன்களாகக் கருதி வழிப்பட்ட பெருமை பாரத நாட்டினர்க்கு உரியதாகும். அழகினைத் திருமகள் என்றும், அறிவினை கலைமகள் என்றும் கொண்டு பாரத முன்னோர்கள் போற்றினார்கள். வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளை பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளைப் பாரதியார் போற்றும் முறை சாலச் சிறந்ததாகும். இவ்வுலகில் வழங்கும் கலைகளைக் கவிக் கலையென்றும், பயன் கலையென்றும் பகுத்துக் கூறுவதுண்டு. கண்ணையும், செவியையும் அவற்றின் வாயிலாக மனதுக்கு இன்பமூட்டும் கலைகள் கவின்கலைகள் ஆகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பலதரப்பட்ட பொருட்களை ஆக்கிக் கொள்வதற்குச் சாதனமாகிய கலைகள் பயன் கலைகள் எனப்படும். இவ்விரு வகைக் கலைகளின் வடிவமாக நாமகள் விளங்குகின்றாள் என்னும் உண்மையைப் பாரதியார் அருளிப் போந்தார். செஞ்சொற் கவியியற்றும் கலைவாணர் கருத்திலம் உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும் உலகினர்க்கு ஒளி நெறி காட்டும் உயரிய மறையிலும் கலைமகள் மகிழ்ந்துரைகின்றாள். இன்னும், இன்னிசை வீணையை மலர்க்காத்திலேந்தியே கலைமகள், மக்கள் பேசும் மழலை மொழியிலும், மாதர் இசைக்கும் மதருப் பாட்டிலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும் சிறையாரும் மடக்கிளியின் செந்நாவிலும் அமர்ந்திருக்கின்றாள். அன்றியும், மாகூடங்களை எனவே செவியினைக் கவரும் இயற்கவியும், இன்னிசையும், கண்களைக் கவரும் ஓவியமும், சிற்பமும் அறிவுத் தெய்வம் உறையும் இடங்களாகும்.

**(10 புள்ளிகள்)**

**(04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ் என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். தமிழ் மிகவும் இனிமையுடைய மொழி. திருந்திய இலக்கன அமைதி நிரம்பிய மொழி. ஆகவே இதனை உயர் தனிச்செம்மொழி என்பர்.

திராவிட மொழிகளுள் தமிழ் தலைமை வாய்ந்தது. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளும் திராவிட இனத்தைச் சேர்ந்தவைகளாகும். இவை தமிழினின்று பிரிந்த மொழிகள். 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும்' என்று சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறியதும் இக்கருத்தை விளக்குவதாகும். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்." என பாரதிதாசன் இதன் இனிமையைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

தமிழ்மொழி மூவேந்தராலும் வளர்க்கப்பட்டது. எனினும், தமிழைப் பெரிதும் போற்றி வளர்த்த பெருமை பாண்டிய மன்னருக்கே உரியது. பாண்டிய மன்னர்கள் தமிழ்ச்சங்கம் அமைத்துப் புலவர் பலரை ஒருங்குகூட்டித் தமிழை நன்கு வளர்த்தனர். தமிழ்ச்சங்கம் முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என முப்பிரிவாயமைந்திருந்தது. கடைச்சங்கம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததென்று அறிஞர் கூறுகின்றனர்.

1. தமிழினின்று பிரிந்த மொழிகள் எவை?
2. தமிழின் இனிமை பாராட்டிப் பாடிய புலவர் யார்? எவ்வாறு பாடியுள்ளார்?
3. தமிழை உயர் தனிச் செம்மொழி என அழைப்பதற்கான காரணம் யாது?
4. பாண்டிய மன்னனின் தமிழ்ப்பணியைக் குறிப்பிடுக.
5. தமிழ் வளர்த்த சங்கங்கள் எப்பிரிவாக அமைந்திருந்தன?

**(10 புள்ளிகள்)**

**(05)** அரசாங்கப் பாடசாலை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கி வருவது ஓர் வரப்பிரசாதமாகும். அவ்வாறான நூல்களை மாணவர்கள் கவனமாகப் பாவித்தல் வேண்டும் என்பதையும் நூல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக.

(100 சொற்களில் அமைதல் வேண்டும்)

**அல்லது**

உமது பாடசாலையில் இடம்பெற்ற வலயமட்ட தமிழ்மொழித்தின விழா பற்றிய அறிக்கை எழுதுக.

(100 சொற்களில் அமைதல் வேண்டும்)

**(15 புள்ளிகள்)**



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

தரம் 10

# முதலாம் தவணைப் பரீட்சை - 2019

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III

சேர்விலக்கம் :

நேரம் : 2 மணித்தியாலம்

- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் யாதாயினும் ஒரு வினாவுக்கும் விடை தருக.

**(01) சுருக்கமான விடை தருக.**

i) "விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்"

அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ) வெகுளி என்பதன் பொருள் யாது?

ii) "எமிரோவோரி என்பாள்
எந்துண்டி வஸ்தி என்பாள்"

அ) இக் கூற்று இடம்பெறும் சிறுகதை எது?

ஆ) இது யாருடைய கூற்றாக அமைகின்றது?

iii) "அது கிடக்க எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை"

அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ) ஏன் கூறப்பட்டது?

iv) மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாங் கொக்கு"

அ) மடைத்தலை என்பது யாது?

ஆ) கொக்கு எதற்கு ஒப்பிடப்பட்டுளளது?

v) அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தால் ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விட்டுப் பாடஞ் சொல்வது வழக்கம்"

அ) இங்கு அவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) ஆவாகணம் பண்ணுதல் என்பதன் பொருள் யாது?

vi) "கணக்காயரில்லாத ஊரும் பிணக்கறுக்கும் மூத்தோர் இல்லா அவைக்களனும்"

அ) இந்தப் பாடலைப் பாடியவர் யார்?

ஆ) இந்த நூல் எக் காலத்தில் பாடப்பட்டது?

vii) பெற்றோரை ஏமாற்றி களவாக ஓடிவந்த காதலியைப் போல ஆசை தீரப் பார்த்துக் கொண்டே இருந்தேன்"

அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?

viii) "பொய்மைசேர் மதியினிற் புலை நாத்திகம்........"

அ) இப்பாடல் வரியில் புலப்படும் செய்தி யாது?

ஆ) புலை நாத்திகம் என்பது எதனைக் குறிக்கின்றது?

ix) அ) நாவலர் அவர்கள் வாதிட எழுந்த விதத்தினைக் குறிப்பிடுக.

ஆ) நாவலர் அவர்கள் வாதமகாசபையை கண்காணித்துக் கொண்டிருந்த விதத்தினைக் குறிப்பிடுக.

x) அ) முதுமொழி வெண்பா பாடலில் ஆசிரியர் வலியுறுத்தும் கருத்துக்கள் எவை?

ஆ) அப் பாடலில் குறிப்பிடப்படும் பழமொழி ஒன்றினைக் குறிப்பிடுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. யானை அனையவர் நண்பு ஒரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் -
அறிந்தும் அறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்தவேல் மெய்யதாம் வால் குழைக்கும் நாய்

அ) இப்பாடலில் நட்பு பற்றிக் கூறப்படும் செய்தி யாது?
ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி ஒன்றினை எடுத்து விளக்குக.

2. சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மாயத மாகுமால்
ஆழ நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர், சோர்வினர் ஆடுபோல்
தாவித் தாவிப் பல பொருள் நாடுவோர்
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

அ) தாம் விரும்பியவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் பண்புகளைக் குறிப்பிடுக.
ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியினை விளக்குக.

3. கைவேல் எறிகிற வேல் - இறகுள்ள அம்பு இல்லாத அம்பு - வாள் - சக்கரம் இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கை வைக்கின்ற சமயம் இந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள், வாதம் இல்லாத இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள்

அ) இப்பகுதியில் கூறப்படும் விடயம் யாது?
ஆ) பிறிற்றோ கட்சியின் வலிமை பற்றி யாது கூறப்பட்டுள்ளது?

4. தேம்படு பனையின் திரள் பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே
தெள்ளிய வாலின் சிறு பழத்தொரு விதை
தெண்ணீர் கயத்துட் சிறு மீன் சினையிலும்
நுண்ணிதே யாயினும் அவற்றை யானை
அணி தேர்புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகுமே
அதனால்
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம்
சிறியருமல்லர்

அ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நாற்படைகளும் எவை?
ஆ) இப்பாடல் உணர்த்தும் உண்மை யாது?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Scanned with CamScanner

www.agaram.lk

5\. பிரசண்ட மாருதத்திற்குப்பிறகு என்று சொல்கின்ற "பிறகு" அந்த சபையில் நிலவியது. பேச்சு, மூச்சு ஒன்றுமில்லை. மேலே கிளம்பின. பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே கீழே இறங்கித் தரை மட்டத்திற்கு வந்து விட்டார்கள். தபால், தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றி பலர் கூட்டங்கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் என்றார்.

அ) பிரசண்ட மாருதம் என்றால் என்ன?

ஆ) இப்பந்தியில் விவரிக்கப்படும் சூழ்நிலை எத்தகையது?

**(20 புள்ளிகள்)**

(03) பாரதியார் சுயசரிதை என்ற பகுதியில்,

அ) கவிஞர் கையாண்டுள்ள உவமைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

ஆ) தாம் விரும்பியவற்றை பெறமுடியாதவர்கள் யாவர் என்பதை விளக்குக.

**அல்லது**

அ) நீதிப்பாடல்கள் மனித வாழ்க்கையை வளப்படுத்துகின்றன எனும் கூற்றை விளக்குக.

ஆ) நாலடியாரின் உண்மையான நட்பு பற்றியும் போலி நட்பு பற்றியும் எடுத்துக் கூறுமாற்றினை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

(04) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

அ) சேர். பொன் இராமநாதன்துரை, பிறிற்றோ ஆகியோரின் குணவியல்புகளை எடுத்தக் காட்டுக.

ஆ) நாவலர் காலத்தில் சட்ட சபைத் தெரிவு எவ்வாறு இடம்பெற்றது?

**அல்லது**

அ) வெற்றி வேட்கை எனும் நூலில் பெரியோர், சிறியோரின் இயல்புகள் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன?

ஆ) இனியவை நாற்பது எனும் நீதி நூலில் இனிய செயல்களாகக் கூறப்படுபவை எவை?

**(15 புள்ளிகள்)**

(05) அடக்கமுடையர் அறிவிலர் என்ற பகுதியில் ஔவையார் கையாண்டுள்ள உவமை அணியினை எடுத்து விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(06) நாவலர் எழுந்தார் என்ற பகுதியில் நாவலரின் ஆளுமைப் பண்பினை எடுத்துக் காட்டுக.

**(10 புள்ளிகள்)**

(07) பாரதியார் சுயசரிதை எனும் பகுதியில் சிறுமி மீதான காதலும் மக்கள் முன்னேற்றத்துக்குத் தேவையான விடயங்களையும் கூறியுள்ள விதத்தை எடுத்துக் காட்டுக. **(10 புள்ளிகள்)**



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk
Scanned with CamScanner